**தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 270 அம்பாறை மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள், மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 12 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

---

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 963.00 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அவற்றில் ரூபா 936.62 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 26.38 மில்லியன் அல்லது தேறிய நிதி ஏற்பாட்டில் 2.74 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 886.00 | 859.74 | 26.26 | 2.96 |
| மூலதனம் | 77.00 | 76.88 | 0.12 | 0.16 |
| மொத்தம் | 963.00 | 936.62 | 26.38 | 2.74 |

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 12 அமைச்சுக்கள் மற்றும் ஒரு திணைக்களத்தால் ரூபா 2,339.76 மில்லியன் கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,251.44 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 88.32 மில்லியன் அல்லது 3.77 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 50.00 | 49.99 | 40.00 | 49.15 | 350.00 | 152.26 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 வைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 214.67 மில்லியனாகும் விபரம் கீழே தரப்படுகின்றது.

| வைப்புக்கணக்கின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0089/000 | 9.30 |
| 6000/0000/00/0002/0119/000 | 1.90 |
| 6000/0000/00/0014/0013/000 | 13.04 |
| 6000/0000/00/0016/0067/000 | 154.03 |
| 6000/0000/00/0017/0020/000 | 1.52 |
| 6000/0000/00/0020/0011/000 | 34.89 |
| மொத்தம் | 214.67 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டு கணக்கும் இணக்க கூற்றும் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பந்தி 1.1 இல் காட்டப்பட்டவாறு முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | கணனி துணைக்கருவி மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 06 பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பெற்றுக்கொள்ளப்பட்ட காசோலைகள், காசுக் கட்டடளைகள் முதலியவற்றிற்கான பதிவேடும் பொருள் இருப்புப் பதிவேடும் | நிதிப்பிரமாணம் 451 மற்றும் 454(1) | உஹன பிரதேச செயலகத்தால் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | 08 பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | 09 பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிகள் | 04 பிரதேச செயலகங்களால் பேணப்பட்டிருக்கவில்லை. |

**3.2 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

---

**3.2.1 சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

---

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீள்குடியேற்றப்படுகின்ற மக்களுக்காக வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

---

இச் செயற்திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு பசு மாடுகளையும் ஆடுகளையும் வழங்குவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுயதொழில் முயற்சியாளர்களுக்கு பசுக்களை வழங்குதல்

---

நாவிதன்வெளி மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகங்களால் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 7.85 மில்லியன் செலவு செய்து 79 பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- நாவிதன்வெளி மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகங்களின் கொள்வனவுக் குழுத் தீர்மானத்தின் பிரகாரம் சஹிவால் கலப்பு (Sahival Mix) வகையான 79 பசுக்களை கொள்வனவு செய்தல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தீர்மானத்திற்கு முரணாக உள்நாடு மற்றும் ஜர்சி வகையான 49 பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு சுயதொழில் முயற்சியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பசுக்களை சுயதொழில் முயற்சியாளர்களுக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது.

- 2016 சனவரி 01 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் சஹிவால் கலப்பு வகையான பசுக்களின் நிறை 1 கிலோ கிராம் ரூபா 250 படி செலுத்தப்பட வேண்டியிருந்தது. மேற்கூறிய 79 பசுக்களின் சராசரி மொத்த நிறை 15,958 கிலோ கிராம்களுக்காக ரூபா 3,989,500 செலுத்த வேண்டியிருந்தது. எனினும் 79 பசுக்களுக்காக ரூபா 7,850,000 உரிய பிரதேச செயலகத்தால்

செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,860,500 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- திருக்கோவில் பிரதேச செயலகத்தால் மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்த 04 பசுக்களின் மொத்த நிறை 808 கிலோகிராமிற்கு மேலே குறிப்பிட்ட கால்நடை அபிவிருத்திச் சபையின் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 202,000 செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்காக ரூபா 396,200 செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 194,200 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) சுயதொழில் முயற்சியாளர்களுக்கு ஆடுகள் பகிர்ந்தளித்தல்

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினால் மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 600,000 செலவு செய்து 35 ஆடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2016 சனவரி 01 ஆந் திகதிய 03/2016 இலக்க கால்நடை அபிவிருத்திச் சபையின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்டின் நிறை 1 கிலோ கிராமிற்கு ரூபா 800 செலுத்த வேண்டியிருந்தது. கொள்வனவு செய்த ஆடுகளுக்கு மத்தியில் 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீகப் பரிசோதனையின் போது 08 ஆடுகளின் மொத்த நிறை 176 கிலோகிராமிற்காக ரூபா 140,800 செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்காக 2016 திசெம்பர் 27 ஆந் திகதி 248 கிலோ கிராமிற்காக ரூபா 198,400 செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 57,600 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.
- அவ்வாறே கொள்வனவு செய்யப்பட்ட மொத்த ஆடுகளின் எண்ணிக்கை 35 ஆக இருந்த போதிலும் நலன்பெறுனர்களுக்கு 30 ஆடுகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க ரூபா 85,715 பெறுமதியான 05 ஆடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளுக்கு முரணாக உரிய நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது முறையற்ற வகையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டம்

இச் செயற்திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த மக்களுக்காக ''வீடுகள் நிர்மாணித்துக் கொடுத்தல்'' சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தால் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய எம்ஆர்/4/1 ஆம் இலக்க சிறைச்சாலைகளை மறுசீரமைத்தல் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்யும் போது அதிக புள்ளிகளைப் பெற்ற 13 நலன்பெறுனர்கள் உறுதியான காரணமின்றி நீக்கப்பட்டிருந்தார்கள்.

55 இலிருந்து 75 வரையான வீச்சுடைய குறைந்த அளவான புள்ளிகளைப் பெற்ற 08 நலன்பெறுனர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள். இதன் காரணமாக வீடுகளைப் பெறுவதற்கான தகைமைகளைக் கொண்ட நலன்பெறுனர்களுக்கு செயற்திட்டத்தின் கீழ் நலன்களைப் பெறுவதற்கிருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

(ii) ஆலையடிவேம்பு மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகங்களால் மாவட்ட செயலாளரின் அங்கீகாரமின்றி முறையற்ற வகையில் தெரிவு செய்யப்பட்ட 21 நலன்பெறுனர்களுக்கு ரூபா 5.79 மில்லியன் நலன்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(iii) தெரிவு செய்யப்பட்ட நலன்பெறுனர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட காணியின் உரிமை காணப்பட வேண்டிய போதிலும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தால் காணிகள் உரிமை இல்லாத 08 நலன்பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(iv) 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய எம்ஆர்/4/1 ஆம் இலக்க சிறைச்சாலைகளை மறுசீரமைத்தல் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சின் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ரூபா 190,000 தொகையான முதலாவது தவனைப்பணம் வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்தது. எனினும் சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தினால் 07 நலன்பெறுனர்களுக்கு முதலாவது தவணைப் பணம் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர் செலுத்தப்பட்டிருந்ததனால் உரிய செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்தல் தாமதமடைந்திருந்தது.

(v) மதிப்பீட்டின் பிரகாரம் வெளிச்சுவரின் கனம் 06 அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் நிர்மணிக்கப்பட்ட 04 வீடுகளின் வெளிச்சுவர்களின் கனம் 04 அங்குலம் மாத்திரம் காணப்பட்டமை பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எனவே பிரதேச செயலகத்தினால் சரியான மேற்பார்வை செய்யாமையின் காரணமாக நலன்பெறுனர்களுக்கு மேலதிகச் செலவை மேற்கொள்ள வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) இடம்பெயர்ந்த மக்களுக்காக மலசலகூடங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

---

தெரிவு செய்யப்பட்ட நலன்பெறுனர்களுக்காக மாவட்ட செயலகத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் தமன, அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேச செயலகங்களால் 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய எம்ஆர்/4/1 ஆம் இலக்க சிறைச்சாலைகளை மறுசீரமைத்தல் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கு முரணாக முறையற்ற வகையில் தெரிவு செய்யப்பட்ட 142 நலன்பெறுனர்களுக்கு மாவட்ட செயலாளரின் அங்கீகாரமின்றி ரூபா 6.92 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இடம்பெயர்ந்த மக்களுக்கு குடிநீர் வழங்கும் செயற்திட்டம்

---

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மகஓயா பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 30 கிணறுகளில் 10 கிணறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது ஒரு நலன்பெறுனரினால் 18 அடி ஆழம் வரை அவரின் ஊழியத்தைப் பயன்படுத்தி கிணறு தோண்டப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட கிணறு தோண்டுதலுக்கான ரூபா 22,625 பணம் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மற்றுமொரு நலன்பெறுனர் கிணற்றைத் தோண்டுவதற்காக ரூபா 18,000 தொகையை தனிப்பட்ட ரீதியில் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தியிருந்ததனால் அந்த 02 கிணறுகளுக்குமாக ரூபா 40,625 தொகை ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் 292 நலன் பெறுனர்களுக்காக குடிநீர் வசதிகள் வழங்குவதற்கு ரூபா 3.82 மில்லியன் உஹன பிரதேச செயலகத்தால் 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2017 யூலை 06 ஆந் திகதி வரை 225 நலன்பெறுனர்களுக்கு மாத்திரம் நீர் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 26 நலன்பெறுனர்கள் நீர் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தனிப்பட்ட ரீதியாக பணம் செலுத்தியிருந்த போதிலும் பிரதேச செயலகத்தினாலும் அந்த நலன்பெறுனர்களுக்காக ரூபா 338,922 தொகை 2017 யூலை 12 ஆந் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இடம்பெயர்ந்தவர்களுக்கான வாழ்வாதார நிவாரண நிகழ்ச்சித்திட்டம்

மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த மக்களுக்காக சுயதொழிலுக்கான உபகரணங்களை வழங்குவது சம்பந்தமாகச் செய்த தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தால் 04 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள நலன்பெறுனர்களுக்கு ரூபா 845,250 செலவு செய்து 23 அரிசி உற்பத்தி இயந்திரங்கள் 2016 திசெம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2017 யூலை 11 ஆந் திகதி மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 10 நலன்பெறுனர்களுக்காக வழங்கப்பட்ட இயந்திரங்கள் உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படாது நலன்பெறுனர்களின் வீடுகளில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ii) மேற்கூறிய பிரதேச செயலகத்தால் 04 கிராம சேவையாளர் பிரிவுகளின் 24 உத்தியோகத்தர்களுக்கு நெல் கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 360,000 பெறுமதியான ஒரு காசோலை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு எழுதப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை 11 ஆந் திகதி வரையும் நெல் கொள்வனவு செய்து நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்கூறிய பிரதேச செயலகத்தினால் 06 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 46 நபர்களுக்காக 2016 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 276,000 செலுத்தி பசளை கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை 11 ஆந் திகதி வரை 36 நபர்களுக்கு மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

### 3.2.2 சமூக சேவைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்

சமூக சேவைகள் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற ஊனமுற்ற நபர்களுக்காக ரூபா 3,000 படிகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2016 சனவரி 06 ஆந் திகதிய NCPD/3/2015 ஆம் இலக்க சமூக சேவைகள் அமைச்சின் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட நலன்பெறுனர்களுக்குரிய படிகள் வங்கி கணக்கின் மூலம் செலுத்தப்பட வேண்டியிருந்ததாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தால் 2016 சனவரி மாதத்திலிருந்து 2016 ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 4,740,000 மொத்த படிகள் பணமாகச் செலுத்தப்பட்டதனால் உரிய பணம் நலன்பெறுனர்களுக்கு கிடைத்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

### 3.2.3 தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்

அமைச்சின் கீழ் அடுல்படுத்தப்படுகின்ற “ கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ” கீழ் திருக்கோவில் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 04 நீர் வழங்கலுக்காக ரூபா 3,565,008 தொகையானது 2016 திசெம்பர் மாதமளவில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2017 யூலை 10 ஆம் திகதி வரை உரிய நீர்வழங்கல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 5,202,535 கூட்டு மொத்த தொகையான 83 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகம் மற்றும் இந்து மத கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது கோவில்களைப் புனரமைத்தல் மற்றும் சக்தி வித்தியாலத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு ரூபா 1.06 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உரிய குறிக்கோளுக்காக அப்பணம் பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

27001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,714,336 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 03 மாதங்களிலிருந்து 09 மாதங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டுவருகின்ற போதிலும் 2016 திசெம்பர் 31 வரையும் அம்மீதிகளை அறவீடு செய்வதற்கு மாவட்ட செயலகத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,168,938 மொத்த தொகையை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 12 உத்தியோக பூர்வ இல்லங்கள் 01 ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் காலமாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வீடமைப்புத் திட்டத்தை அமுல்படுத்திய காணியின் (King Abdulla Model Town) நிர்மாண நடவடிக்கைகளுக்கு பொருத்துவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மின் உபகரணங்களும் குளியலறைப் பொருட்களும் பொருத்தப்படாது 06 ஆண்டுகள் காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.6 இணக்கமின்மைகள்

(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 141 | காசோலை ஒன்றை எழுதும் போது முதலாவது கையொப்பம் வைத்து இரண்டாவது கையொப்பம் வைக்கப்பட வேண்டிய போதிலும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் இரண்டாவது கையொப்பம் மாத்திரம் வைத்து ரூபா 53,922 பெறுமதியான காசோலை வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை | |
| வழிகாட்டி 5.4.11 | ஒப்பந்தத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி தொடர்பான விபரத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கும் போது அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 33,236,926 தொகையான பெறுமதி சேர் வரி சம்பந்தமான தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) வரித் தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிந்தவூர் பிரதேச செயலகத்தால் அமுல்படுத்தப்பட்ட நிந்தவூர் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ''அல்மினா வித்தியாலயத்தின் உள்ளக பெட்மின்டன் விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தலுக்கான '' பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்யப்படாத ஒரு ஒப்பந்தகாரருக்கு ரூபா 495,724 பணம் பெறுமதி சேர் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) விளையாட்டுத் துறை அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் லாகுகல பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட பானம ஆர் சந்திரசேன மற்றும் லாகுகல பொதுமக்கள் விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரிப்பணமாகிய ரூபா 527,281 தொகை 2016 திசெம்பர் 29 ஆந் திகதியிலிருந்து 2017 மார்ச் 23 ஆந் திகதி வரை செலுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டது.

## 3.7 உள்நாட்டு நிதி மூலங்களிலிருந்து செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல், செயற்திட்ட தாமதங்கள் என்பன தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | உஹன பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் சந்தைப்படுத்தல் நிலையம் ஒன்றை நிர்மாணித்தல். | 2,725,017 | 2016.12.20 | சரியாக மதிப்பீடு தயாரிக்காமை மற்றும் ஒப்பந்தகாரர் முன்வராமை. |
| (ii) | தெஹியத்த கண்டிய பிரதேச செயலகத்தை நிர்மாணித்தல் | 9,000,000 | 2016 | காணியை தெரிவு செய்தல் சம்பந்தமான சிக்கல் காரணமாக அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

(ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடுதல்

மாவட்ட செயலகத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவுகள் | கைவிடப் பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ---------------------- | -------------<br>ரூபா | ------------------ | -------------------<br>ரூபா | ---------------------------- |
| (i) | தமன பொசன்புர விளையாட்டு மைதானமும் மேடையும் நிர்மாணித்தல் | 1,455,348 | 2014.10.27 | 217,087 | 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் நிறைவேற்ற முடியாதென ஒப்பந்தகாரரர் வெளிப்படுத்தியிருந்தமை. |
| (ii) | அம்பாறை நவகம்கொடை அணை நிர்மாணிக்கும் செயற்திட்டம் | 2,524,654 | 2014.11.15 | 141,960 | சாத்தியவள ஆய்வின் போது இருந்த நிலைமையைக் கருத்திற் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் நிகழ் காலத்தில் அக்கிரயம் அதிகரித்ததன் காரணமாக அமுல்படுத்த முடியாதிருந்தது. |
| (iii) | கல்முனை பிரதேசத்திலுள்ள கல்முனைக் குடியின் 04 கிராம சேவையாளர் பிரிவுகளின் பொது விளையாட்டரங்குகளை அபிவிருத்தி செய்தல் | 1,000,000 | 2014.08.13 | 320,877 | ஒப்பந்தக் கம்பனியின் பலவீனமும் காலநிலையின் தாக்கமும். |
| (iv) | நிந்தவூர், பள்ளவெளி வீதி நிர்மாணம் | 2,000,000 | 2014.11.30 | 219,846 | இச்செயற்திட்டமானது நீர்ப்பாசனத் திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்தும் உரிய விவசாயிகளுக்கு மத்தியில் ஏற்பட்ட பிணக்குகளின் காரணமாக அமுல்படுத்த முடியாதிருந்தமை. |
| (v) | சாய்ந்தமருது ஸாஹிரா வித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டிட நிர்மாணம். | 5,000,000 | 2014.12.30 | 1,252,979 | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு போதிய காலம் இல்லாமையும் பாடசாலைப் பரீட்சைகளும் அதிக மழையும் காரணமாக பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (vi) | சாய்ந்தமருது ஸாஹிரா வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானம் நிர்மாணித்தல் | 3,324,020 | 2016.09.15 | இல்லை | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு போதிய காலம் இல்லாமையும் பாடசாலைப் பரீட்சைகளும் அதிக மழையும் காரணமாக பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. |

(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

மாவட்ட செயலகத்தால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| | செயற்திட்டம் | மதிப்பிடப் பட்ட கிரயம் | ஆரம்பித்த திகதி | பூர்த்தி செய்ய வேண்டிய திகதி | பூர்த்தி செய்த திகதி | 2016 திசெம்பர் 31 வரை செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | ரூபா | |
| (i) | அம்பாறை நவகம்புர சத்தாதிஸ்ஸபுர ஆரம்ப பாடசாலையில் புதிய இரண்டு மாடிக் கட்டிடம் நிர்மாணித்தல் | 4,916,439 | 2014.11.21 | 2015.01.04 | 2016.12.27 | 4,380,000 | ஒப்பந்தக்காரரின் தாமதமும் தாமதமாகி நிதி கிடைத்தமையும் |
| (ii) | அம்பாறை டீ.எஸ். சேனநாயக்க வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானமும் விளையாட்டு மண்டபமும் நிர்மாணித்தல். | 2,468,744 | 2014.12.31 | 2015.02.15 | 2015.12.19 | 2,058,107 | நிலம் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த சட்டச் சிக்கல்களும் மேற்பார்வை நடவடிக்கைகளில் பலவீனமும். |
| (iii) | உதயபுர விளையாட்டு மைதானமும் விளையாட்டு மண்டபமும் நிர்மாணித்தல் | 2,615,097 | 2014.10.20 | 2014.12.05 | 2015.12.20 | 2,443,661 | ஒப்பந்தகாரரின் தாமதமும் தாமதித்து நிதி கிடைத்தமையும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (iv) | அம்பாறை ரஜவெவ விளையாட்டு மைதானம் நிர்மாணித்தல் | 954,231 | 2014.11.24 | 2015.01.08 | 2015.12.19 | 945,676 | தாமதித்து நிதி கிடைத்தமை. |
| (v) | பொல்வேரியன் 01 வீதியை அபிவிருத்தி செய்தல் | 1,179,375 | 2013.12.31 | 2014.03.31 | 2016.12.31 | 1,179,234 | தாமதித்து நிதி கிடைத்தமை. |

**3.8 செயலாற்றல்**

---------------------

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்பு கீழே தரப்படுகின்றது.

(அ) குறிக்கோள்களுக்கு முரணாக செயற்திட்டத்தை நிறைவேற்றுதல்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் மூலம் தெஹியத்தகண்டிய பிரதேச செயலக புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 9.00 மில்லியன் நிதி ஏற்பாடு அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிதி ஏற்பாட்டை வேறு பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) விளையாட்டுத்துறை அமைச்சினால் 2016 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட ‘‘கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் லாகுகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பானம ஆர்.சந்திரசேன மற்றும் லாகுகல பொத விளையாட்டரங்குகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,258,000 செலவு செய்யப்பட்டிருந்தது இரண்டு விளையாட்டு மைதானங்களையும் சுற்றி ஒன்று ரூபா 6,800 படி தாங்கிகளுடனான சிறிய அளவுடைய 185 CFL பல்புகளுடனான வெளிச்ச தூண்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எனினும் இந்த விளையாட்டு மைதானங்கள் இரவு நேரங்களில் பயன்படுத்தப்படாததனால் மேற்குறிப்பிட்ட சிறிய பல்புக்களைப் பயன்படுத்தும் தேவைப்பாடு இல்லாததனாலும் இப்பணம் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பணிகள்

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டிற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற ‘‘முன்பள்ளி மாணவர்களுக்கான ஒரு பசும்பால் கோப்பை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்’’ அம்பாறை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. தகைமை பெற்றுக்கொண்ட 739

முன்பாடசாலைகளில் 21,005 மாணவர்கள் இருந்ததுடன் அவர்களுக்காக நாளாந்த பால் தேவைப்பாடு 3,151 லீற்றர்களாகக் காணப்பட்டது.

எனினும் இலங்கையின் பால் உற்பத்திகளைக் கருத்தில் கொள்கையில் உயர்ந்தபால் உற்பத்தியுடன் அம்பாறை மாவட்டத்தில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 08 பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள 92 முன்பள்ளிகளின் 3,722 மாணவர்களுக்காக மாத்திரம் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் முன்பள்ளி மாணவர்களின் முன்னேற்றத்திற்கு தேவையான விட்டமின்களைப் பெற்றக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது

(ii) 2014 திசெம்பர் மாதத்தில் லாகுகல மற்றும் தெஹிஅத்த கண்டிய பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளாகிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக பிரதேச செயலகத்தால் நலன்பெறுனர்களின் பதிவேடு சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அத்தகவல்களை அமைச்சுக்கு சரியாகச் சமர்ப்பிக்காமையின் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது நலன்பெறுனர்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 23.69 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் ரூபா 13.67 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்நிதி ஏற்பாடு அமைச்சின் ஏனைய செயற்திட்ட நலன்பெறுநர்களுக்காக பயன்படுத்துவதற்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

**3.9 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் மாகாண எழுச்சித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் தமன பிரதேச செயலகத்தில் பொசன்புர விளையாட்டு மைதானம் மற்றும் மேடையை நிர்மாணிப்பதற்கு ரூபா 1,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 217,087 தொகையான நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க பொது மக்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த பிரதிபலன் இழக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் பூர்த்தி செய்யாமை சம்பந்தமாக ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் நிந்தவூர் பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் பள்ளவெளி வீதியை நிர்மாணிப்பதற்காக சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது ரூபா 2,000,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 219,846 அளவில் செலவு செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் கைவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக இச்செலவு ஒரு விளைதிறனற்ற செலவாகக் காணப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராமிய எழுச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தைச் சார்ந்த சாஹிரா வித்தியாலயத்தில் ஒரு வகுப்பறைக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் உரிய அணைத்துப் பணமும் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அதற்காக ரூபா 1,252,979 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருதது. அதற்கிணங்க உரிய செயற்திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கக்கூடியதாகவிருந்த நலன்களை வழங்க முடியாதிருந்ததுடன் இதன் காரணமாக ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யாமை சம்பந்தமாக உடன்படிக்கையின்

பிரகாரம் ஒப்பந்தகாரர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விளையாட்டுத்துறை அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள சாஹிரா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 4,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படகூடியதாக இருந்த நலன்கள் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்தம் பூர்த்தி செய்யாமை சம்பந்தமாக உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்கார் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 ஆம் ஆண்டிற்கான பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் நிந்தவூர் பிரதேச செயலகத்தினால் அல்மினா வித்தியாலயத்தில் உள்ளக பெட்மின்டன் விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக தயாரிக்கப்பட்ட ஆரம்ப பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட அளவை மிகைத்து கொடுப்பனவு செய்ததன் காரணமாக ரூபா 1,013,169 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆரம்ப மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 929,010 பெறுமதியைக் கொண்ட மின்சாரம் வழங்குதல், அலுமினியம் கதவுகளையும் ஜன்னல்களையும் பொருத்துதல் என்பவற்றை உள்ளடக்கிய 20 அம்சங்களின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 3.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடுகள்

**செம்மையாக்கப்படவேண்டிய மீதி**

மாவட்ட செயலகத்தினால் 2016 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றுக்களில் காட்டப்பட்ட செம்மையாக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிபடுத்தப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | செம்மையாக்கல்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 6 மாதங்களுக்கு மேற்பட்டவை 1 ஆண்டிற்கு உட்பட்டவை | 1 ஆண்டிற்கு மேற்பட்டவை 3 ஆண்டுகளுக்கு குறைந்தவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாப்படாத வைப்புக்கள் | - | 10,000 | 10,000 |
| (ii) | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 152,539 | - | 152,539 |
| (iii) | இணங்கப்படாத வரவு | 86,048 | - | 86,048 |
| (iv) | இணங்கப்படாத செலவு | 800 | - | 800 |
| | மொத்தம் | 239,387 | 10,000 | 249,387 |

## 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

### (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலுள்ள நடைமுறைகளை மீறல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மஹஓய பிரதேச செயலகத்தினால் ரூபா 6,112,961 மொத்த தொகையான 30 கிணறுகளை நிர்மானிக்கும் செயற்திட்டத்திற்கான கேட்பு மனுக்களை திறக்கும் கூட்டத்திற்கு ஒப்பந்தகாரர்களோ அல்லத அவர்களின் பிரதிநிதிகளோ,குழுவின் தலைவரோ பங்குபற்றாது ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் மாதத்தின் போது பதியதலாவை மற்றும் லாகுகல பிரதேச செயலகங்களால் ரூபா 4,694,074 தொகையான தளபாடங்களையும் அலுவலக உபகரணங்களையும் பெற்றுக்கொள்வதற்காக கேள்வி கோரப்படாது கொள்வனவு செய்யப்படடிருந்தன.

(iii) மகளிர் மற்றும் சிறுவர் வீவகார அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற ''கற்பினித் தாய்மார்களுக்கான போசாக்கான உணவுகளை வழங்குதல் நிகழ்ச்சித்திட்டத்தின்'' கீழ் 2016 ஏப்ரல் 11 திகதிய 06/2016 ஆம் இலக்க மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகைத் தீர்மானத்திற்கு இணங்க கொள்வனவு செய்தல் சில வழங்குனர்களின் மூலம் இடம்பெறவேண்டிய போதிலும் அதற்கு முரணாக சம்மாந்துறை பிரதேச செயலகம் ஒரு மாதத்தின் போது அணைத்து கொள்வனவுகளையும் ஒரு வழங்குணரிடமிருந்து மாத்திரம் மேற்கொண்டிருந்தது.

(iv) 2016 ஆம் ஆண்டிற்காக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் நிதி ஏற்பாட்டின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொத்துவில் பிரதேச செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,391,500 பெறுமதியான 46 நீர்ப்பம்பிகள் அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டிக் கோவைகளுக்கு முரணாக தனி ஒரு வழங்குணரிடமிருந்து மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### (ஆ) அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளரால் ஒப்பந்த நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 3,518,152 மொத்த தொகையான 06 கொடுப்பனவுகள் உறுதிச்சான்றுகள் அதிகாரப் பொறுப்பின்றி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட ''இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக குடிநீர் கிணறுகளை நிர்மாணிக்கும் செயற்த்திதிட்டத்தின்'' கீழ் உரிய குடிநீர் கிணறுகளை நிர்மாணித்தலானது 2016 மே 02 ஆந் திகதிய எம் ஆர்/04/40 ஆம் இலக்க சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் இந்து சமய விவகார அமைச்சின் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின்

பிரகாரம் நலன்பெறுனரினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மஹஓயா மற்றும் திருக்கோவில் பிரதேச செயலகங்களால் ரூபா 10,272,961 மொத்த தொகையான 50 கிணறுகளை நிர்மாணித்தல் அமைச்சின் அங்கீகாரமின்றி ஒப்பந்தகாரர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.12 நட்டங்களும் சேதங்களும்**

அம்பாறை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சியம் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி திருடர்களால் உடைக்கப்பட்டதனால் ஏற்பட்ட நட்டம் ரூபா 850,738 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு உரிய அமைச்சிற்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இறுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.13 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்முனை பிரதேச செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட கல்முனைகுடி 04 கிராமசேவையாளர் பிரிவில் பெதுவிளையாட்டரங்கை அபிவிருத்தி செய்யும் போது மதிப்பீட்டின் பிரகாரம் நிறைவேற்றப்படாத செற்பாடுகளுக்காக ரூபா 120,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.14 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்ட செயலகத்தால் சரிசெய்யப்பட்டிருந்த பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுக்கான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்திகளின் இலக்கம் | |
| 2014 | 3.1 | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 3.9 | கெப் வாகனம் திருத்தப்படாது பல ஆண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டிருத்தல். |
| 2015 | 3.6 (ஆ) (i) | மஹஓயா அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள களுபெனிபெத்த முன்பள்ளிக் கட்டிடம் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்படாமை. |
| 2015 | 3.6 (ஆ) (ii) | மஹஓயா அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பெம்பிடிய வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதியை நிர்மாணிக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாமை. |
| 2015 | 3.6 (ஆ) (iii) | மஹஓயா அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வராபிடிய வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாமை. |

| | | |
|---|---|---|
| 2015 | 3.6 (ஆ) (iv) | பதியதலாவ அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள மரங்கல சனசமூக நிலைய நிர்மாணத்தின் மிகுதி நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்யாமை. |
| 2015 | 3.11 | சத்தாதிஸ்ஸபுர களஞ்சியம் உடைக்கப்பட்டதனால் ஏற்பட்ட நட்டத்தை அளவீடு செய்யாமை. |

### 3.15 சச்சரவுத் தன்மையான விடயங்கள்

தாபன விதிக்கோவையின் XXX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் பொத்துவில் பிரதேச செயலகத்தின் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அவரின் மனைவியால் ஒரு வர்த்தக நிறுவனம் பேணப்பட்டு வந்தது. பொத்துவில் பிரதேச செயலகத்தால் அந்த வர்த்தக நிறுவனத்திடமிருந்து கர்ப்பினித் தாய்மார்களின் ஊட்டச்சத்து பொதி நிகழ்ச்சித்திட்டத்திற்காக உரிய ரூபா 8,146,000 மொத்த பெறுமதியான உணவுப்பொருட்கள் 2016 மே மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.16 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ‘‘முன்பள்ளி மாணவர்களுக்கு பால் கோப்பை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் 2015 பெப்ரவரி 10 ஆந் திகதிய 2015/01 ஆம் இலக்க மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜங்க அமைச்சின் சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதேசத்திலுள்ள பொது சுகாதார பரிசோதகரினால் நிரந்தரமாக பாலின் சுகாதார பாதுகாப்பு நிலைமையையும் கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்களால் பாலின் தரத்தையும் பரீட்சித்தல் வேண்டும். 2016 ஆம் ஆண்டிற்காக தெஹியத்த கண்டிய பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட பாலுக்கான சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெஹியத்த கண்டிய பிரதேச செயலகத்தின் கீழ் அமுல்படுத்துகின்ற விதாதா வள நிலையம் 08 ஆண்டுகள் காலம் செய்யப்படாதிருந்ததுடன் நிலையத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 15 இலட்சம் பொறுமதியான கணனி துணைக்கருவிகள், யோகட் உற்பத்தி செய்யும் இயந்திரம், உணவுகளை உலரவைக்கும் இயந்திரம், என்பன பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன இதன் காரணமாக நிலையத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்கவேண்டியிருந்த நலன்களை வழங்குவதற்காக பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற கர்ப்பினித் தாய்மார்களுக்காக மாதாந்தம் ரூபா 2,000 தொகையான ஊட்டச்சத்து உணவுப்பொதி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக தெஹியத்த கண்டிய பிரதே செயலகத்தால் 2016 ஏப்பரல் மாதத்திற்காக ரூபா 92,000 பொறுமதியான 46 ஊட்டச்சத்துப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சியிருந்தன. அப்பொதிகள் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியிலிருந்து 2016 நவம்பர் 23 ஆந் திகதி வரையும் முறையற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் உணவுப் பொருட்கள் பயன்படுத்துவதற்கும் பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2016 மே மாதத்தில் அறநாயக்க பிரதேசத்தில் மண்சரிவினால் இடம்பெயர்ந்த குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்காக பகிர்ந்தளிப்பதற்கு தெஹியத்த

கண்டிய பிரதேசத்திலுள்ள மக்களால் பிரதேச செயலகத்திற்கு நன்கொடையளிக்கப்பட்ட ரூபா 62,395 பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் இருப்பு பகிர்ந்தளிக்கப்படாது 2016 நவம்பர் 23 ஆந் திகதி வரையும் முறையற்ற வகையில் களஞ்சியகப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) தெஹியத்த கண்டிய, ஆலையடி வேம்பு, தமன, சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் செயற்படுத்தப்படுகின்ற நேரக் குறிகாட்டி இயந்திரங்கள் செயற்படாதிருந்த போதிலும் அவற்றை திருத்தம் செய்து செயற்படுத்துவதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தெஹியத்த கண்டிய பிரதேச செயலகத்தில் 2016 யூன் மாதத்திற்கான சம்பளத்தை வங்கியில் வைப்புச் செய்தலில் இடம்பெற்ற தவறின் காரணமாக ரூபா 34,430 தொகையான மீதி இனங்காணப்படாத மீதியாக 2016 யூன் மாதத்திலிருந்து ஒக்தோபர் மாதம் வரையும் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றுக்களில் காணப்பட்டன. அவற்றைத் திருத்தம் செய்வதற்கு 2016 நவம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) உஹன பிரதேச செயலகத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்ட விதாதா வள நிலையமும் அதில் காணப்பட்ட இயந்திரங்களும் உபகரணங்களும் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதியிலிருந்து பயன்படுத்தப்படாது 2016 நவம்பர் 10 ஆந் திகதி வரை 04 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

(ஏ) பொத்துவில் பிரதேச செயலகத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 86,047 பெறுமதியான இனங்காணப்படாத கொடுப்பனவுகள் வங்கி கணக்கிணக்ககூற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றை இனங்கண்டு சரிசெய்வதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ஒரு தனியார் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 100,000 பெறுமதியான காசோலை 2016 யூன் 30 ஆந் திகதி வரை பணமாக மாற்றுவதற்காக வங்கிக்குச் சமர்ப்பிபப்கப்பட்டிருக்கவில்லை.

## 3.17 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியினரும் உள்ளபடியான பதவியினரும்**

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலுமுள்ள பதவியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| ஊழியரின் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் | உள்ளபடியான பதவியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட மட்டம் | 84 | 77 | 7 | - |
| ii. | மூன்றாம் மட்டம் | 83 | 16 | 67 | - |
| iii | இரண்டாம் மட்டம் | 1,874 | 1,676 | 198 | - |
| iv | ஆரம்ப மட்டம் | 214 | 233 | - | 19 |
| | மொத்தம் | 2,255 | 2,002 | 272 | 19 |